ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

2454/54 - 2025 සැප්තැම්බර් මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.09.18
*2454/54 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கை அதிபர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

ஐந்தாவது திருத்தம்

பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2014, ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதிய மற்றும் 1885/31 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அதிபர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புக்கமைய,

**டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன**
செயலாளர்,
பகிரங்க சேவை ஆணைக்குழு.

2025, செத்தெம்பர் 16.

பகுதி I

திருத்த இலக்கம் 01 - 2017 பெப்புருவரி மாதம் 02 ஆம் திகதிய மற்றும் 2004/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 02 - 2018 யூன் மாதம் 19 ஆம் திகதிய மற்றும் 2076/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 02 - 2018 யூலை மாதம் 11 ஆம் திகதிய மற்றும் 2079/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 03 - 2020 திசெம்பர் மாதம் 30 ஆம் திகதிய மற்றும் 2208/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருந்த இலக்கம் 04 - 2021 நவெம்பர் மாதம் 26 ஆம் திகதிய மற்றும் 2255/55 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

**பகுதி II**

02 ஆவது பந்தியிலிருந்து 05 ஆவது பந்தி வரை அனைத்து இடங்களிலுமுள்ள வகுப்பு எனும் பதத்திற்குப் பதிலாகத் தரம் எனும் பதத்தைப் பதிலீடு செய்தல்.

**06. சேவைக்குரிய பதவிகள்**

**6.2 இணைந்த பதவிகளின் எண்ணிக்கை அட்டவணையானது பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.**

| *தரம்* | *எண்ணிக்கை* |
|---|---|
| தரம் I | 3532 |
| தரம் II/III | 12980 |

**7. ஆட்சேர்ப்பு செய்யும் முறை :** 7.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 7.2.1 பிரிவு பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

7.2.1 ஆட்சேர்ப்புச் செய்யும் தரம் ; இலங்கை அதிபர் சேவையின் தரம் III

7.2.4 ஆட்சேர்ப்பு முறை :

7.2.4.3.1 சாதாரண நேர்முகப் பரீட்சை

"எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட ஒழுங்கு முறைக்கேற்ப வெற்றிடங்களைப் போன்று இரு மடங்கு சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அதில் தகைமை பெறுவோர் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்." என்பது நீக்கப்படுகிறது.

தற்போது காணப்படும் "குறிப்பை" நீக்கிப் பின்வரும் குறிப்பை உள்ளடக்கவும்.

குறிப்பு :

I. விண்ணப்பதாரியொருவருக்குத் தனது விருப்பத்திற்கு அமைய வெற்றிடங்கள் நிலவும் 03 மாவட்டங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் ஒவ்வொரு மொழிமூலத்திற்கும் அமைய வெற்றிடங்கள் நிலவும் மாவட்டங்கள் பகிரங்கப்படுத்தப்படும்.

II, ஒவ்வொரு மாவட்டத்திலும் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலங்களுக்கு அமைய நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையானது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதற்கு முன்னர் பகிரங்கப்படுத்தப்படும்.

III. எழுத்துமூலப் பரீட்சையின் போது பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசைக்கு அமைய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விருப்பத்தை தெரிவித்துள்ள விண்ணப்பதாரிகளுள் குறித்த மாவட்டத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கிற்குக் குறையாத எண்ணிக்கையினர் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலங்களுக்கு அமைய சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். (ஏதேனும் ஒரு மாவட்டத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையானது பத்திற்குக் (10) குறைவாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் 20 விண்ணப்பதாரிகளுக்குக் குறையாத எண்ணிக்கையினர் அழைக்கப்படுவர்).

IV. சாதாரண நேர்முகப் பரீட்சையின்போது அடிப்படைத் தகைமைகள் மாத்திரம் பரீட்சிக்கப்படுவதுடன், அந் நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பங்குபற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றுதலானது அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகக் கவனத்திற் கொள்வதற்கான உரிமையாகக் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

V. எழுத்துமூலப் பரீட்சையின் போது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு அமைய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தயாரிக்கப்படும் திறமை ஒழுங்கு வரிசை

அடிப்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்குத் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பத் தெரிவு ஒழுங்கு வரிசைக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பத் தெரிவு ஒழுங்கை எந்தவொரு காரணத்திற்காகவும் பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

VI. மேற்குறித்தவாறு ஏதேனும் ஒரு மாவட்டத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் அந்த மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் பெறுவதற்கு மாவட்டத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் சேவையாற்றுதல் வேண்டும்.

VII. ஏதேனும் ஒரு மாவட்டத்தின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்பு செய்ய முடியாமற் போகும் சந்தர்ப்பத்தில் எஞ்சிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மீண்டும் சாதாரண மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகளை மேற்குறித்தவாறு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

VIII. ஏதேனும் ஒரு மாவட்டத்தில் நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த போதிய எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் காணப்படாத சந்தர்ப்பத்தில் குறித்த எஞ்சிய வெற்றிடங்களுக்கு முறையே அம் மாவட்டம் உரித்தாகும் மாகாணத்தில் மற்றும் அகில இலங்கை மட்டத்தில் காணப்படும் திறமை ஒழுங்கு வரிசைக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**08. வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை :**

8.1 அட்டவணை பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

| வினைத்திறன்காண் தடை தாண்டல் | வினைத்திறன்காண் தடை தாண்டலில் சித்தியடைய வேண்டிய காலம் | வினைத்திறன்காண் தடை தாண்டலின் தன்மை எழுத்துமூலப் பரீட்சை/ தொழில்சார் பரீட்சை/ சான்றிதழ் பாடநெறி/ பிற |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் | இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்து மூன்று (03) வருடங்களுக்குள் | எழுத்துமூலப் பரீட்சை பின்னிணைப்பு “ஆ” |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் | இலங்கை அதிபர் சேவையின் தரம் II இற்குப் பதவி உயர்வு பெற்று மூன்று (03) வருடங்களுக்குள் | எழுத்துமூலப் பரீட்சை பின்னிணைப்பு “இ” |

9. மொழித் தேர்ச்சியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பில் 9.1, 9.2 மற்றும் 9.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் நீக்கப்படுகின்றன.

**10. தரம் ரீதியான பதவி உயர்வு :**

10.1.1 (ii) ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது:

(ii) பதவி உயர்த்துவதற்கான தகைமை பெறுகின்ற தினத்தன்று சேவையின் தரம் III இல் ஆகக் குறைந்தது ஆறு வருட (06) செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், ஆறு (06) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல் வேண்டும்.

10.1.2 பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது:

10.1.2 பதவி உயர்வு முறை :

தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற உத்தியோகத்தர்கள் நியமன அதிகாரிக்கு உரிய படிவங்களின் ஊடாக விண்ணப்பிக்கும் போது தகைமைகளைப் பரீட்சித்ததன் பின்னர் தகைமை பெறுகின்ற தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தரம் II இற்கு நியமன அதிகாரியினால் பதவி உயர்வு வழங்கப்படும். விண்ணப்பிக்க வேண்டிய படிவம் பின்னிணைப்பு “ஈ” இல் உள்ளது.

10.2.1 (i) பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது:

10.2.1 பூர்த்தி செய்ய வேண்டிய தேவைப்பாடுகள் :

(i) பதவி உயர்த்துவதற்காக தகைமை பெறுகின்ற தினத்தன்று சேவையின் தரம் II இல் ஆகக் குறைந்தது ஆறு வருட (06) செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், ஆறு (06) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல் வேண்டும்.

10.2.2 பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது:

10.2.2 பதவி உயர்வு முறை :

தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற உத்தியோகத்தர்கள் நியமன அதிகாரிக்கு விண்ணப்பிக்கும் போது தகைமைகளைப் பரீட்சித்ததன் பின்னர் தகைமை பெறுகின்ற தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தரம் I இற்கு நியமன அதிகாரியினால் பதவி உயர்வு வழங்கப்படும். விண்ணப்பிக்க வேண்டிய படிவம் பின்னிணைப்பு “உ” இல் உள்ளது.

11. **பதவிகளுக்கு நியமித்தல் :**

அட்டவணையில் வகுப்பு I மற்றும் வகுப்பு 2 மற்றும் 3 என்பன தரம் I மற்றும் தரம் II மற்றும் III என்றவாறு திருத்தம் செய்யப்படுகின்றன.

13. **திறன் விருத்தி :**

13.2 ஆற்றல் விருத்தியின் கீழ் 13.2.1 மற்றும் 13.2.2 என்பன பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றன:

13.2.1. ஆற்றல் விருத்திப் பயிற்சிப் பாடநெறி 1:
அனைத்து உத்தியோகத்தர்களும் அதிபர் சேவைக்கு நியமிக்கப்பட்டு ஆறு (06) வருடங்களுக்குள் வரிசை அமைச்சின் கல்விச் செயலாளரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட நிறுவகம் ஒன்றினால் நடாத்தப்படுகின்ற 01 மாத இயலளவு விருத்திப் பயிற்சிப் பாடநெறி 1 ஐ வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.2.2. ஆற்றல் விருத்திப் பயிற்சிப் பாடநெறி 2:
அனைத்து உத்தியோகத்தர்களும் அதிபர் சேவையின் தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்டு ஆறு (06) வருடங்களுக்குள் வரிசை அமைச்சின் கல்விச் செயலாளரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட நிறுவகம் ஒன்றினால் நடாத்தப்படுகின்ற 01 மாத இயலளவு விருத்திப் பயிற்சிப் பாடநெறி 2 ஐ வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

17. **உள்ளீர்ப்பு செய்யும் நடைமுறை ;**

17.4 உள்ளீர்ப்பு செய்யும் நடைமுறை பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது:

17.4 உள்ளீர்ப்பு செய்யும் நடைமுறை ;

17.4.1 இச் சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படும் தினத்தன்று இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் சேவையின் தரம் III இற்கும்,

17.4.2 இச் சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படும் தினத்தன்று இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 2 இன் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் சேவையின் தரம் II இற்கும்,

17.4.3 இச் சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படும் தினத்தன்று இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 2 இன் தரம் I ஐச் சேர்ந்த முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 2008.07.01 ஆந் திகதியன்று இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 1 இற்குப் பதவி உயர்வு பெறுவதற்கான தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் சேவையின் தரம் I இற்கும் ஏனைய வகுப்பு 2 இன் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் சேவையின் தரம் II இற்கும்,

17.4.4 இச் சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படும் தினத்தன்று இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 1 ஐச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களும் சேவையின் தரம் I இற்கும், உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

பின்னிணைப்பு “அ” இன் 03 (அ) பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது:

03 (அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

பின்னிணைப்பு “ஆ” பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

**பின்னிணைப்பு “ஆ”**

**இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை**

01. இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையானது பின்வரும் பாடங்களைக் கொண்டமைந்திருக்கும்.

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| 1. தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 2. பாடசாலை நிதி நிர்வாகம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 3. இணைப்பு மொழி (ஆங்கிலம்) | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

02. உத்தியோகத்தர் ஒருவருக்குரிய பாடங்களுக்கு ஒரே தடவையில் அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

03. சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

04. பாடத்திட்டம்

(i) தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் - காலம் : 02 மணித்தியாலங்கள்.

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் VII, VIII, IX, X, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள் மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்படும்.

(ii) பாடசாலை நிதி நிர்வாகம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் - காலம் : 02 மணித்தியாலங்கள்

வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள், நிதி நிர்வாகம் மற்றும் நிதிப் பொறுப்புக்களைக் கையளித்தல், பணத்தை ஏற்றல், கணக்குப் பதிவு மற்றும் கொடுப்பனவு, அரசாங்க பணக் கட்டுக்காப்பு, கட்டுநிதிகளும் வங்கிக் கணக்குகளும், வேலைகள் மற்றும் சேவைகள், பொருள் கணக்கெடுப்பு, கணக்காய்வு ஐயவினாக்கள், அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்ற பேரேடுகள், வருமானச் செலவு சுருக்கம், வங்கிக் கணக்கிணக்கக் கூற்று, கொடுக்கப்படாத கூலிகள், கடமை தொலைபேசி தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் பற்றிய சாதாரண அறிவு பரீட்சிக்கப்படும்.

(iii) இணைப்பு மொழி (ஆங்கிலம்) - காலம் : 03 மணித்தியாலங்கள்

பாடத்திட்டம்

Suitable level of proficiency on the following forms of grammar in the written language is expected from the candidate: -

- Tenses and Numbers
- Sentences (Simple/Compound/Complex/Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Determiners
- Prepositions

The knowledge on the modern formats and styles of writing is tested in following area of study:

- Summary writing
- Report writing
- Essay writing

குறிப்பு ; பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 08/2020 பிரகாரம் 2020.07.01 ஆம் திகதியிலிருந்து பின்வரும் தகைமைகளுடனான உத்தியோகத்தர்கள் இணைப்பு மொழியில் சித்தியடைவதற்கான தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களாகக் கருதப்படுவர்.

அ. ஆங்கில மொழிமூலத்தில் பட்டத்தை/ பட்டப்பின் பட்டத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள்.

ஆ. க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் (மேலதிக பாடமொன்றாக அல்லாத வகையில்) சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர்கள்.

இ. க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் (மேலதிக பாடமொன்றாக அல்லாத வகையில்) திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள்.

ஈ. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் பரீட்சைக்கு ஆங்கில மொழிமூலத்தில் தோற்றும் உத்தியோகத்தர்கள்.

05 (அ) இப்பரீட்சையின் 01 மற்றும் 02 வினாப்பத்திரங்கள் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலங்களில் நடாத்தப்படுவதுடன், 03 ஆம் வினாப்பத்திரம் ஆங்கில மொழியில் நடைபெறும்.

(ஆ) பரீட்சார்த்திகள் தாம் விரும்பிய ஒரு மொழியில் மாத்திம் இப் பரீட்சையின் 01 ஆம் மற்றும் 02 ஆம் வினாப்பத்திரங்களுக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன், இப் பரீட்சையின் 03 ஆம் வினாப்பத்திரத்திற்கு ஆங்கில மொழிமூலத்தில் தோற்றுதல் வேண்டும்.

பின்னிணைப்பு “இ” இன் தலைப்பு மற்றும் 01 பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றன.

**பின்னிணைப்பு “இ”**

**இலங்கை அதிபர் சேவையின் தரம் II இற்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை**

01. சேவையின் தரம் II இற்குரிய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையானது பின்வரும் பாடங்களைக் கொண்டமைந்திருக்கும்.

பின்னிணைப்பு “ஈ” நீக்கப்படுகிறது.

தற்போது காணப்படும் “உ” பின்னிணைப்பானது “ஈ” எனவும், “ஊ” பின்னிணைப்பானது “உ” எனவும் திருத்தம் செய்யப்படுகின்றன.

EOG 09 - 0187